
கருத்துச் சுதந்திரம்
TASLIMA NASRIN
LAJJA
ஏ.பி. எம். இத்ரீஸ் (நளீமி)
தாருல் அர்கம் வெளியீடு

# கருத்துச் சுதந்திரம்

ஏ.பி.எம்.இத்ரீஸ்

(தாருல் அர்கம் வெளியீடு)

**இந்நூல்**

சுதந்திர உணர்வு மனிதனது அடிப்படை உணர்வாகும். இது உடலியல் ரீதியானதாக மட்டுமன்றி, சிந்தனா ரீதியாகவும் செயல்படுவதாகும். இவ்விரு வழிகளிலும் அடிமைப்பட்டுள்ள மனிதன் அவனது இயல்பான உந்துதல் காரணமாக சுதந்திர நிலையை அடைவதற்காகப் போராடுகின்றான். ஆனால், போராட்டத்தின் வெற்றி, காட்டுக்கழுதைச் சுதந்திரமாக வெளிப்படுகின்றது. இது, மனித நிலைக்கு ஒவ்வாததென்பதை உணராத மனிதன் எல்லாக் கட்டுப்பாடுகளையும் உடைத்துக் கொண்டு செயல்படுகின்றான்.

இதே கண்ணோட்டம் இஸ்லாத்தை வாழ்க்கை முறையாக அங்கீகரித்தவர்களிடமும் வளர்ந்து வந்தவர்களிடம் வெளிப்பாடாகவே சகோதரர் சல்மான் ருஷ்டியையும் , சகோதரி தஸ்லீமா நஸ்ரினையும் அண்மைக் காலத்தில் சந்திச்சோம். அவர்களின் எழுத்தாக்கங்களை சுதந்திர சிந்தனையின் வெளிப்பாடெனெ அங்கீகரிப்பதா அல்லது கட்டுப்பாட்டை மீறிய வெளிப்பாடென நிராகரிப்பதா என்ற வாதப் பிரதிவாதங்கள் இன்று நிகழ்ந்து கொண்டிருக்கின்றன.

இந்தப் பின்னணியில் எமது சிந்தனையை நெறிப்படுத்தும் வகையில் அல்குர்ஆன் , சுன்னாவினதும் ’ஸலபி’ ’கலபி’ அறிஞர்களதும் கண்ணோட்டத்தில் தர்க்க ரீதியான விளக்கங்களை இந்நூல் முன்வைக்கின்றது.

இதன் ஆசிரியர் சகோதரர் ஏ.பி.எம். இத்ரீஸ் வாழைச்சேனையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். நளீமிய்யா கலாபீடத்தின் பட்டம் பெற்றவர். பள்ளிப் பருவம் முதல் எழுத்துத் துறையில் ஈடுபடுபவர்.

அவரின் சிந்தனையில் உருவான இந்நூல் இரு தீவிரவாதங்களுக்குடையில் மூன்றாவது நிலையில் நின்று கருத்துத் தெளிவு பெற துணையாக அமையுமென நம்புகின்றோம்.

எம்.எச்.எம். நாளிர் BA ( Hons ) PGD (Ed)

- சுதந்திரவான்களுக்கு!
- சிந்திக்கும் சுதந்திரம்
- கொள்கைச் சுதந்திரம்
    - றித்தா ஒரு கண்ணோட்டம்
    - றித்தா – ஒரு பிரபஞ்சத் துரோகம்
    - றித்தா – ஒரு தேசத்துரோகம்
    - றித்தா – உயிருக்கு உத்தரவாதமளிப்பதில்லை
- மேற்கின் பார்வையில் சுதந்திரம்
- இவர்களை என்ன செய்யலாம்?

# சுதந்திரவான்களுக்கு!

சுதந்திரக்காற்றை சுவாசிக்க முடியாத எந்த மனிதனும் இருக்க முடியாது. சுதந்திரம் மனிதனின் மூச்சுக்குச் சமனானது. அந்தக் காற்றை எவரும் தடைசெய்ய முடியாது.

மனிதனில் காணப்படும் சுதந்திர உணர்வுதான் அவனை விலங்கிலிருந்து வேறுபடுத்தி வைத்திருக்கிறது.

இந்த சுதந்திரம் கட்டுப்படுத்தப்படாத போது மனித சமூகம் அழிந்திருக்கிறது. கட்டுப்படுத்தப்பட்ட போது உலகத்தில் அடிமைத்துவம் பிறப்பெடுத்தது. சுதந்திரம், கட்டுப்பாடு இவை இரண்டுக்கும் இடைப்பட்ட ஒரு வாழ்க்கைத் தத்துவத்தை மனித மூளையால் உருவாக்க முடியவில்லை.

நாம் வாழும் இக்காலமும் மனித உரிமைகளைப் பேசுகின்ற காலம். அதற்காக மாநாடுகள் கூட்டி மன்றங்கள் அமைத்து சிந்திக்கின்ற காலம். எழுத்துரிமையைப் போன்று மத உரிமைகளையும் மனிதனின் பிறப்புரிமை என்று பேசுகின்ற காலம்.

எழுத்துரிமைகளுக்காகப் போராடுபவர்கள் மதஉரிமையை மறந்துவிடுகிறார்கள். மதஉரிமைபற்றிச் சிந்திப்பவர்கள் எழுத்துரிமையை வேரோடு பிடுங்கிய எறிந்துவிட முனைகிறார்கள். இந்த இரண்டு நிலைகளையும் அங்கீகரிக்க முடியுமா?

அண்மைக்காலங்களாக தஸ்லீமா நஸ்ரின், ஸல்மான் ருஷ்டி போன்ற எழுத்தாளர்கள் இஸ்லாத்தை எதிர்த்து எழுதியும் பேசியும் வருகிறார்கள். நம்நாட்டுப் பத்திரிகைகள் பல இவ்விருவரின் எழுத்துரிமைகள் பற்றியும் அவர்களுக்கு விதிக்கப்பட்டிருக்கும் கொலைத்தண்டனை குறித்தும் விமர்சித்து எழுதுவது நாமறிந்த விடயமே.

நாம் இஸ்லாமியர்கள் என்ற வகையில் சிறுபான்மை இல்லாவிட்டாலும் இந்நாட்டைப் பெருத்தவரையில் நாம் சிறுபான்மைச் சமூகமே. சிங்கள, தமிழ் சகோதர சமூகங்களுக்கு மத்தியில் வாழும் நாம் இப்பிரச்சினைகள் குறித்து சரியானதோர் இஸ்லாமியக் கருத்தோட்டத்திற்கு வருவதும் அதற்கமைய எமது நிலைப்பாட்டை அமைத்துக் கொள்வதும் அவசியமாகும்.

ஏனெனில் இதுவரை நாம் வாசித்த – தஸ்லீமா அல்லது ஸல்மான் விவகாரம் குறித்த – கட்டுரைகள் எல்லாம் சரியான இஸ்லாமியக் கண்ணோட்டத்தில் அணுகப்படவில்லை என்றே சொல்லலாம். அல்லது மாக்ஸிய, மதச்சார்பற்ற சிந்தனைப் போக்குகள் பின்னணியில்தான் அவை அணுகப்பட்டு வருகின்றன.

இவ்வாறான அணுகுமுறைகள் முற்றிலும் தவறானவை, தவிர்க்கப்பட வேண்டியவை என்பதை நாம் இரண்டுவகையில் அடையாளம் காட்டலாம்.

ஒன்று, இது முற்றிலும் இஸ்லாத்திற்கே உரிய தனியான பிரச்சினையாகும். ஏனைய மதங்களை, கொள்கைகளை விட்டுப்பிரிந்து செல்பவருக்கு முர்தத் – மதம்மாரியவர் – என்ற சொல் கையாளப்படுவதில்லை. இஸ்லாத்தை ஏற்றுக்கொண்ட ஒருவர் அதைவிட்டும் வெளியேறும்போதுதான் இக்குற்றம் சுமத்தப்படுகின்றது.

அடுத்தது, இது மதச்சார்பின்மை கூர்மையடைந்துள்ள காலப்பிரிவாகும். அனைத்து அம்சங்களிலும் மதத்தைப் புறந்தள்ளிவிட்டு சிந்திப்பதாலும் எல்லா மதங்களையும் போன்று இஸ்லாத்தையும் எடைபோடுவதாலும் இப்பிரச்சினை இஸ்லாமிய கண்ணோட்டத்தில் அணுகப்படவேண்டும்.

இஸ்லாமிய கண்ணோட்டம் என்பது இனத்தை, நிறத்தை, மொழியை, பிரதேசத்தை அடிப்படையாகக் கொண்ட கண்ணோட்டங்கள் அல்ல. மாறாக அது பிரபஞ்சம், மனிதன், வாழ்வு, இறைவன் பற்றிய விரிந்த கண்ணோட்டமாகும்.

இந்தவகையில் இச்சிறு நூல் இஸ்லாத்தின் சிந்தனைச்சுதந்திரம் பற்றியும், மனித உரிமை பற்றியும் விளக்கிச் சொல்வதோடு அவற்றின் பின்னணியில் ரித்தா – மதம் மாற்றம் பற்றியும் அதற்கு வழங்கப்படும் தண்டனை குறித்தும் இஸ்லாத்தின் கருத்தியல் வாதம் முன்வைக்கப்படுகின்றது. நூலின் இறுதி இப்பிரச்சினை குறித்த சமகால அணுகுமுறை எவ்வாறு இருக்க வேண்டும் என்ற கேள்விக்கான விடைதேடுவதாக அமைந்துள்ளது.

நவீன இஸ்லாமிய உலகின் சட்ட அறிஞர்களாக விளங்கும் கலாநிதி யூசுப் அல் கர்ளாவி, அஷ்ஷஹீத் அப்துல் காதிர் அவ்தா, அஷ்ஷெய்க் ஸலீம் அல்அவா, அஷ்ஷெய்க் ஸெய்யித் ஸாபிக் போன்றோர் இஸ்லாமிய சட்டத்தின் பின்னணியில் விளக்கமளிக்கும் ரித்தா பற்றிய கருத்தாக்கங்களை தொகுத்து தருவதாகவே எமது பணி அமைந்துள்ளது எனலாம்.

இஸ்லாமிய விமர்சனத்திற்குள்ளாகியிருக்கும் பகுதிகளில் ரித்தாவும் ஒன்றாகும். எனவே, அதுபற்றிய நல்லதோர் தெளிவை நமக்கும், சகோதர மதங்களைச் சேர்ந்தவர்களுக்கும் இச்சிறுநூல் வழங்குவதற்கு இறைவன் அருள்புரிவானாக!

இந்தவகையில் என்னை எழுதுமாறு இடைவிடாது தூண்டடிய எனது அன்புக்குரிய தோழர் முஹம்மத் ஸாதுலி அவர்களுக்கும் இந்நூலுக்கான அட்டைப்படத்தை அழகுற அமைத்துத்தந்த எம்.கே.எம் ஷகீப் நளீமி அவர்களுக்கும் எனது ஆழ்ந்த நன்றிகள் உரித்தாகட்டும்.

அன்புடன்,

உங்கள் சகோதரன்,

**ஏ.பி.எம். இத்ரீஸ்**

# சிந்திக்கும் சுதந்திரம்

சிந்திக்கச் செய்து ஆராயத்தூண்டி, கண்மூடிப் பின்பற்றுவதை வெறுக்குமாறு செய்தது இஸ்லாம் ஒன்றேதான். இந்த சிந்தனைச் சுதந்திரத்தின் விளைவாக இஸ்லாமிய வரலாற்றில் எத்தனையோ சிந்தனைப் பிரிவுகள் தோற்றம் பெற்றதை நாம் பார்க்கிறோம்.

முஃதஸிலா*, அஷ் அரிய்யா, மாத்ரூதிய்யா போன்ற தத்துவ இயக்கங்கள் தோன்றி வளர்வதற்கு இஸ்லாம் கொடுத்திருந்த சிந்தனைச் சுதந்திரமே காரணமாகும். இவற்றில் இஸ்லாத்தின் அடிப்படைகளோடு ஒத்துச் செல்லக்கூடியவை எவை? ஒத்துச் செல்லாதவை எவை? என்ற பிரச்சினை ஒருபுறமிருக்கட்டும். மாறாக இஸ்லாம் சிந்திக்கும் உரிமையில் கைவைக்கவில்லை என்பதையே இது காட்டுகிறது.

உதாரணமாக குர்ஆனின் மொழியழகைப் பற்றி பரவலாக விளக்கிக் காட்டிய குர்ஆன் விரிவுரையாளர் இமாம் ஸமக்ஷரி முஃதஸிலா கொள்கையைச் சேர்ந்தவர். அல்குர்ஆனுக்கு எழுதிய அல்கஷ்ஷாப் என்ற நூலில் முஃதஸிலக் கருத்துக்கள் பரவலாகக் காணப்படுகின்ற. ஆனால் இந்த நூலைப் படித்துப் பயன்பெறாத எந்த அஹ்லுஸ்ஸுன்னா அறிஞரும் கிடையாது. அல்ஹாபில் இப்னுல் ஹஜர் அல் அஸ்கரானி இந்நூலில் வருகின்ற ஹதீஸ்களை திறனாய்வு செய்து அல்ஷாபி பீ தக்ரீஜி அஹாதிஸி கஷ்ஷாப் என்று ஒரு நூலையே எழுதினார். இமாம் இப்னு முனீர் இந்நூலில் வருகின்ற முஃதஸிலா கருத்துக்களை இனங்கண்டு விமர்சிக்கிறார். இவர்களில் யாரும் ஸமக் ஷரி ஒரு முஃதஸிலி என்று கருதி அவரது நல்ல கருத்துக்களை ஒதுக்கவில்லை. இது இஸ்லாத்தின் அடிப்படை நம்பிக்கைகளில் எவ்வளவு தூரம் தாராளத்தன்மை காணப்படுகிறது என்பதைக் காட்டப் போதுமானதாகும்.

இவ்வாறே இஸ்லாமிய சட்டத்துறையை எடுத்துப்பார்த்தால் அது சிந்தனைச் சுதந்திரத்திற்கு மிகமிக அதிகமாக விரிந்து கொடுத்திருப்பதைக் காணமுடியும். அதைவிட இஸ்லாத்தின் கிளையம்சங்களில் சிந்தனைச் சுதந்திரம் விழுதுகள் விட்டு வேர்பரப்பியிருப்பதைக் காணலாம்.

இஸ்லாமிய சட்டத்துறையில் ஒரு சிந்தனைப் பிரிவின் ஸ்தாபகராக விளங்கும் இமாம் ஷாபி அவர்கள் தனது சிந்தனை பிரிவு பற்றிச் சொல்லும்போது எனது கண்ணோட்டத்தில் எனது கருத்து சரியானது. அது தவறையும் கொண்டிருக்கலாம். எனது கண்ணோட்டத்தில் பிறரின் கருத்து பிழையானது. அது சரியாகவும் இருக்கலாம்.

வேறு சில சட்ட அறிஞர்கள் எல்லாக்கருத்துக்களும் சரியையும் பிழையையும் கொண்டிருக்க முடியும் என்று கூறுகின்றனர். அவர்களில் சிலர் கூறும் போது எல்லா முஜ்தஹிதுகளும் சொல்வது சரியானது. ஏனெனில் அவர்களின் கருத்துக்கள் யாவும் அல்லாஹ்வுடைய கருத்துக்களே. சத்தியம் என்பது அல்லாஹ்விடம் பலவகையாக இருக்க முடியும் என்று கூறுகின்றனர்.

எனவே இச்சட்ட அறிஞர்களின் கருத்தை வைத்துப் பார்க்கும் போது இஸ்லாம் எந்தளவுக்கு சிந்திக்கும் உரிமையை வழங்கியிருக்கின்றது என்பதையும் அதை எவ்வளவு தூரம் இவர்கள் புரிந்து வைத்திருக்கிறார்கள் என்பதையும் விளங்கிக் கொள்ளலாம்.

## கொள்கைச் சுதந்திரம்

கொள்கைச் சுதந்திரம் என்பதன் கருத்து இஸ்லாம் யாரையும் நிர்பந்தித்து மார்க்கத்தில் நுழைய வைப்பதில்லை என்பதாகும். இந்த கொள்கைச் சுதந்திரத்தை குர்ஆன் மக்காவிலேயே பேசியிருக்கிறது.

“நபியே! நீங்கள் மனிதர்களை விசுவாசிகளாக மாறவேண்டுமென நிர்ப்பந்திக்கிறீர்களா?” (யூனுஸ் 99)

“மார்க்கத்தில் நிர்ப்பந்தம் கிடையாது. வழிகேட்டிலிருந்து நேர்வழி தெளிவாகிவிட்டது.” (அல்பகறா 256)

இஸ்லாமிய சிந்தனையை பிரச்சாரம் செய்து அதனை மக்கள் மத்தியில் பரப்பமுடியும். ஆனால் அதனை ஏற்றுக் கொள்ளுமாறு மனிதர்களை நிர்ப்பந்திப்பதற்கு இஸ்லாத்திலேயே அனுமதி கிடையாது.

“விரும்பியவர் ஈமான் கொள்ளலாம். விரும்பியவர் நிராகரிக்கலாம்.” (அல்கஃப் 29)

“மார்க்கத்தில் உங்களுக்கு எந்தக் கஷ்டத்தையும் ஏற்படுத்தவில்லை.” (அல்ஹஜ் 78)

இஸ்லாம் ஆயுதத்தைக் காட்டி மக்களை தன்பக்கம் அழைக்கவில்லை. இஸ்லாத்தையும் முஸ்லிம்களையும் பாதுகாப்பதற்காகவே இஸ்லாம் ஆயுதத்தைத் தூக்கியிருக்கிறது. இஸ்லாம் சுதந்திரமாகப் பரப்பப்படுவதற்குத் தடைவிதிக்கப்பட்ட போது அல்லது இஸ்லாத்தின் எதிரிகள் அதற்கெதிராக தூக்கியபிறகுதான் இஸ்லாமும் ஆயுதத்தைத் தூக்குமாறு பணித்தது. பல கீழத்தேய வாதிகளும் கிறிஸ்தவர்களும் நினைப்பதைப் போன்று இஸ்லாம் வாளால் பரப்பப்படவில்லை.

இன்று முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழுகின்ற பல முஸ்லிம்நாடுகளுக்கு முஸ்லிம்கள் படையெடுத்துச் சென்றார்கள் என்பதற்கு வரலாற்றில் எந்த ஆதாரமும் கிடையாது. தென்கிழக்காசியாவில் மலேசியா, இந்தோனேசியா, பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளுக்கு முஸ்லிம் ராணுவம் காலடிகூட எடுத்துவைக்கவில்லை. அப்படி இருந்தும் மில்லியன் கணக்கான மக்கள் எப்படி இஸ்லாத்தைத் தழுவினார்கள்?

எகிப்துக்கு சில ஆயிரம் போர்வீரர்கள்தான் படையெடுத்துப் போனார்கள். முழு எகிப்தும் இஸ்லாத்தின் நிழலின் கீழ் வந்தது. அங்கு நிலவிய ரோமரின் அநியாய ஆட்சியிலிருந்து தம்மை விடுவிக்குமாறு கோரி முஸ்லிம் ராணுவத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்ட போதுதான் அது அங்கு சென்றது. அப்போது எகிப்தை ஆட்சி செய்த ரோமர்கள் கிறிஸ்தவர்களாக இருந்தனர். எகிப்தின் சுதேசிகள் கிறிஸ்தவ மதத்தை ஏற்காத ஒரே

காரணத்திற்காக ஆயிரக்கணக்கான எகிப்தியரைக் கொலை செய்தனர். எகிப்திய வரலாற்றில் அஸ்ரு ஸுஹதா – தியாகிகளின் காலம் என அழைக்கப்படும் அளவுக்கு எகிப்து கொலைக்களமாக மாறியிருந்தது. இது எகிப்தியரின் மதம் வேறு என்பதால் கிறிஸ்தவர்கள் நடாத்திய வெறியாட்டமாகும்.

ஆனால் முஸ்லிம் ராணுவம் எகிப்தியரை விடுதலை செய்வதற்காகத்தான் சென்றது. இஸ்லாத்தை திணிப்பதற்காக அல்ல. கிப்தி மொழி பேசிய அவர்கள் அரபை எப்படி தாய்மொழியாக மாற்றினார்கள். இது வாளால் நடந்த மாற்றமென்று யாராலும் கூறமுடியுமா?

சூரியன் மறையாத பிரதேசத்தைப் பெற்றிருந்தவர்களுக்குக் கூட தமது மொழியை நாடுகளின் தேசிய மொழியாக மாற்ற முடியவில்லையே. காரணம் இவர்கள் மண்ணைக் கொள்ளையடிப்பதற்காகத்தான் சென்றார்கள். அது அவர்களுக்குத் தாராளமாகக் கிடைத்தது. ஆனால் இஸ்லாம் மனித மனங்களைக் கொள்ளையடித்தது. எனவே அது இன்னும் வாழ்கிறது.

உமையா ஆட்சியாளர்ளில் சிலர் எகிப்தில் இஸ்லாத்தைத் தழுவியவர்களுக்கும் ஜிஸ்யா வரி விதித்தனர். உமர் இப்னு அப்துல் அஸீஸின் காலம் வரை இது நீடித்த்து. அவர் ஆட்சிக்கு வந்தபோது எகிப்திய கவர்னரிடம் இதுபற்றி விசாரித்தார். அதற்குப் பின்வரும் காரணம் சொல்லப்பட்டது; இஸ்லாத்தைத் தழுவுகின்றவர்களின் தொகை நாளுக்கு நாள் பெருகிவருகின்றது. இஸ்லாமிய அரசின் வரவு செலவுத் திட்டத்தில் இது பாதிப்பை ஏற்படுத்துகின்றது. ஏனெனில் ஒருவர் இஸ்லாத்தைத் தழுவுவதால் அவருக்கு விதிக்கப்பட்டிருந்த ஜிஸ்யா வரி இல்லாமல் போகிறது. மேலும் ஒரு வருடம் பூர்த்தியான பிறகுதான் ஸகாத் கொடுக்கின்றார். இது வரவுசெலவுத் திட்டத்தில் நிதி நெருக்கடியை ஏற்படுத்துகின்றது. எனவேதான் உமையாக்கள் புதிதாக இஸ்லாத்தைத் தழுவுபவர்களுக்கும் ஜிஸ்யா வரிவிதித்து வந்தனர். இதைக் கேள்விப்பட்ட உமர் இப்னு அப்துல் அஸீஸ் எகிப்திய கவர்னருக்கு எழுதிய கடிதத்தில், “அல்லாஹ் முஹம்மத் ஸல் அவர்களை நேர்வழிகாட்டியாகத்தான் அனுப்பினான். வரி அறவிடுபவராக அல்ல” என்று கண்டித்திருந்தார்.

இதன் கருத்து இஸ்லாமிய அரசு என்பது வழிகாட்டும் அரசு. வரி அறவிடும் அரசல்ல. இஸ்லாமிய அரசின் பணி மனிதர்களிடமிருந்து வரிகளைச் சேகரிப்பதல்ல. அவர்களின் வாழ்வுக்கு வழிகாட்டுவது அவர்களின் பணியாகும்.

எனவே இஸ்லாம் எந்த மனிதனையும் அதில் நுழையுமாறு நிர்ப்பந்திப்பதில்லை. விருப்பத்தோடு இஸ்லத்தில் இணைவதைத்தான் இஸ்லாம் விரும்புகின்றது. ஒருவர் நிர்ப்பந்தமான நிலையில் இஸ்லாத்தைத் தழுவினால் இஸ்லாம் அவரை ஏற்றுக்கொள்வதில்லை. அதாவது இஸ்லாமிய நம்பிக்கையின் படி அவர் உண்மை விசுவாசியல்ல. ஒருவர் விருப்பத்தோடு இஸ்லாத்தை தெரிவுசெய்ய வில்லையானால் அவரது ஈமானுக்கு இஸ்லாத்தில் எந்தப் பெறுமானமும் கிடையாது.

மூஸா அலை அவரகளையும் அவரது சமூகத்தையும் பிர்அவ்ன் விரட்டிக்கொண்டு வருகின்றான். இடையில் நயில் நதி குறுக்கிடுகின்றது. அதுவரை மூஸாவின் சமூகத்திற்கு

இடமளித்த பாதை மூடிக்கொள்கிறது. பிர்அவ்னும் அவனது ராணுவமும் நீரில் மூழ்கிவிடுகின்றனர். அப்போதுதான் மூஸாவின் இறைவனை ஈமான் கொண்டதாக பிர்அவ்ன் சொல்கின்றான். ஆனால் இறைவன் அவனது ஈமானை ஏற்றுக் கொள்ளவில்லை என்று குர்ஆன் சொல்கின்றது.

“அவர்கள் எமது கடும் சக்திபடைத்த தண்டனையைக் கண்டபோது நாங்கள் அல்லாஹ்வை மட்டுமே ஈமான் கொள்கிறோம். அவனுக்கு இணைவைத்தவற்றை நிராகரிக்கின்றோம் என்று கூறினார்கள். நமது கடும் சக்திபடைத்த தண்டனையைக் கண்டதன் காரணமாக அவர்கள் கொண்ட ஈமான் அவர்களுக்குப் பயனளிக்கவில்லை.” (ஆபிர் 84-85)

இங்கு விருப்பத் தெரிவின் அடிப்படையில் ஈமான் தோன்றவில்லை. இதனால் பிர்அவ்னின் ஈமான் இறைவனால் ஏற்கப்படவில்லை.

இதிலிருந்து விளங்குவது யாதெனில் இஸ்லாம் சிந்திப்பதற்கும் விரும்பிய கொள்கையைத் தெரிவுசெய்வதற்கும் மனிதனுக்கு சுதந்திரமளித்துள்ளது. இஸ்லாமிய பூமியில் யூத கிறிஸ்தவர்களும் ஏனையோரும் தத்தமது மதங்களையும் கொள்கைகளையும் பின்பற்ற முடியும். அவர்களுடைய நம்பிக்கைகளுக்கு ஏற்ப வழிபாடுகளை நடாத்த முடியும். அவர்களுடைய வணக்கஸ்தளங்களுக்கும் ஏனைய சொத்துக்களுக்கும் இஸ்லாம் உத்தரவாதம் அளிக்கின்றது. எந்தளவுக்கென்றால் முஆவி ரழி அவர்கள் தமது ஆட்சிக்காலத்தில் மாதா கோவில் ஒன்றை கட்டிக்கொடுத்ததாக வரலாறு கூறுகின்றது.

உலகில் யூதர்கள் துன்புறுத்தப்பட்ட போது இஸ்லாமிய நாடுகளுக்குத்தான் இடம்பெயர்ந்தார்கள். காரணம் அங்குதான் அப்போது உண்மையான சுதந்திரமும் மனிதாபிமானமும் நிலவியது எனலாம்.

## றித்தா ஒரு கண்ணோட்டம்

சுதந்திரம் என்பதன் கருத்து இதுமட்டுமல்ல. சுதந்திரத்திற்கு சில வரையறைகளும் இருக்கத்தான் செய்கின்றன. இஸ்லாம் வழங்கிய ஒரு சுதந்திரம் அந்த இஸ்லாத்தையே சிதைத்து அதன் அடிப்படைகளைத் தகர்த்தெறியுமாக இருந்தால் அதனை இஸ்லாம் சுதந்திரமாகக் கருதுவதில்லை. மாறாக துஷ்பிரயோகமாகக் கருதுகின்றது.

இங்குதான் றித்தா என்ற சொற்பிரயோகம் கையாளப்படுகின்றது. ஏன் இஸ்லாம் றித்தாவைத் தடைசெய்ய வேண்டும்? முர்தத்திற்கு ஏன் தண்டனை வழங்க வேண்டும்?

இஸ்லாத்தின் சுதந்திரம் என்பது சமூகமாற்றத்தால் அல்லது மக்கள் புரட்சியால் வழங்கப்பட்டதல்ல. சுதந்திரம் – உரிமை என்ற சொற்களுக்கு அர்த்தம் தெரியாதிருந்த காலப்பிரிவில்தான் இஸ்லாம் சுதந்திரத்தைப் பற்றிப் பேசியது. எனவே மனிதனின் அந்தஸ்த்தை உயர்த்துவதற்கு அவனுக்கு கொள்கைச் சுதந்திரத்தை அல்லது விரும்பிய மார்க்கத்தை பின்பற்றும் உரிமையை வழங்கியது. அதேநேரம் அந்த உரிமைகளுக்கு அந்த வரையறைகளைப் போடத்தவறவில்லை. அதாவது மார்க்கம் சில மனிதர்களின் கைகளில்

ஒருவிளையாட்டுப் பொருளாக மாறிவிடக்கூடாது என்று கருதித்தான் அந்த வரையறைகளைப் போட்டது.

முதல்முறையாக யூதர்கள் இந்த மார்க்கத்தோடு விளையாடினார்கள். இதனைக் குர்ஆன் சொல்லும் போது "வேத்த்தைப் பின்பற்றுவோரில் ஒரு பிரிவினர் தமது சமூகத்திடம் ஈமான் கொண்டோர் மீது இறக்கப்பட்ட குர்ஆனை காலையில் நம்பி மாலையில் நிராகரித்துவிடுங்கள்! இதனால் ஈமான் கொண்டுள்ள அவர்களும் அதைவிட்டுத் திரும்பிவிடக்கூடும் என்று கூறுகின்றனர்." (ஆலஇம்ரான் 72)

ஒருவர் தனக்குத்தானே மதம் மாறிக்கொண்டால் அவரை அல்லாஹ் பார்த்துக்கொள்வான். அவர் இஸ்லாமிய பரிபாஷையில் முனாபிக் என்று அழைக்கப்படுவார். இத்தகைய பண்புகளைக் கொண்டவர்களை நபி ஸல் அவர்கள் தண்டிக்கவில்லை.

இஸ்லாத்தை விளங்கி விருப்பத்தோடு அதனை ஏற்றுக்கொண்ட ஒருவர் அதனோடு விளையாட முடியாது என்பதைத்தான் இந்த வசனம் குறிப்பிடுகின்றது. இன்று இஸ்லாத்தைத் தழுவி விட்டு நாளை அல்லது சிலநாட்கள் கழித்து அவர் நான் நினைத்த்மாதிரி இஸ்லாமோ முஸ்லிம்களோ இல்லை. எனவே நான் அதைவிட்டுப் போகிறேன் என்று கூறி அடுத்தவர்களும் இஸ்லாத்தைவிட்டு வெளியேறுவதற்கு வழிவகுப்பாராயின் அது இஸ்லாத்திற்கும் முஸ்லிம் சமூகத்திற்கும் செய்யும் பாரிய துரோகமாகும். இத்துரோகச் செயலுக்கு நல்லதொரு தண்டனையைக் கொடுக்கும் போதுதான் மார்க்கத்தோடு விளையாட நினைப்பவர்களைக் கட்டுப்படுத்தலாம்.

ஏனெனில் மதமாற்றம் என்பது ஆடைமாற்றுகிற மாதிரியான விடயமொன்றல்ல என்பதை அத்தகையோர் புரிந்துகொள்ள வேண்டும். நினைக்கிறபோது அணிந்து வேண்டாதபோது வீசியெறிவதற்கு இஸ்லாம் கந்தல் துணியல்ல.

யாரும் இஸ்லாத்தைப் படிக்கலாம். அதனை ஆராயலாம். அது மனித வாழ்வுக்குப் பொருத்தமான வாழ்க்கை நெறியாக இருந்தால் அல்லது இருப்பதாக்க் கருதினால் அதனை ஏற்றுக் கொண்டு அதன்படி தனது வாழ்க்கையை அமைத்துக் கொள்ளலாம். அல்லது ஆரம்பத்திலேயே அதனை மறுத்துவிடலாம். ஆனால் இஸ்லாத்தைத் திருப்தியோடு ஏற்றுக் கொண்டுவிட்டுப் பாதிவழியில் அதைவிட்டுப் பிரிந்து போகிறார் என்றால் அதற்கொதிராக ஆட்களைச் சேர்த்துக் கொண்டு எதிர்க்க வருகிறார் என்றால் அவரை எப்படி அச்செயலுக்கு அனுமதிக்க முடியும்.

ஆனால் துரதிஷ்டவசமாக இஸ்லாத்தின் றித்தா பற்றிய சிந்தனையும் அது பற்றிய கண்ணோட்டமும் மேற்குலகில் பிழையாக விளங்கப்பட்டுள்ளது. இது உரிமைகளை மட்டுமே பேசுகின்ற காலமாக இருப்பதாலும் தனிமனித வாதம் எல்லை மீறிப்பின்பற்றப்படுவதாலும் இதை அவர்கள் மனிதஉரிமை மீறல் எனக்கருதுகிறார்கள்.

## றித்தா – ஒரு பிரபஞ்சத் துரோகம்

மனிதன் யார்? அவனைச் சூழவுள்ள பிரபஞ்சம் எத்தகையது? அவனுக்கும் பிரபஞ்சத்துக்குமுள்ள உறவு என்ன? அவன் ஏன் உலகுக்கு வந்தான். அவன் எங்கே போகிறான்? அவன் என்ன செய்ய வேண்டும்? இவை ஒவ்வொரு மனிதனும் விடைகாணவேண்டிய அடிப்படை கேள்விகள். இவற்றுக்குக் கிடைக்கின்ற விடைகளின் மீதுதான் அவன் வாழ்வே அமையப் போகின்றது.

எனவே இதுபற்றி இஸ்லாத்திற்கொரு கண்ணோட்டமிருக்கின்றது. அந்தக் கண்ணோட்டத்திலிருந்துதான் றித்தா அணுகப்பட வேண்டும்.

இந்தப் பிரபஞ்சம் தற்செயலாகத் தோன்றவில்லை. இது அல்லாஹ்வின் படைப்பு. இல்லாமையிலிருந்து அவனே இதனைப் படைத்தான். படைப்பதில் யாரும் அனோடு பங்கு கொள்ளவில்லை.

அவ்வாறே இப்பிரபஞ்சம் இறைவனுக்கு கட்டுப்படும் பிரபஞ்சம். அவனை அறிந்துவைத்திருக்கும் உயிருள்ள ஜீவன். அவனை வழிபடும் பக்தன். அவனையே துதிக்கும் விசுவாசி. அவனை வழிபடாதோரை நோக்கி நீளும் சுட்டுவிரல். அவர்களை சுட்டெரிப்பதற்காகத் திறக்கும் நெற்றிக்கண்.

“(நபியே!) வானங்களில் இருப்பவர்களும் பூமியில் இருப்பவர்களும் சூரியனும் சந்திரனும் நட்சத்திரங்களும் மலைகளும் மரங்களும் கால் நடைகளும் மனிதர்களில் அனேகரும் நிச்சயமாக அல்லாஹ்வுக்குச் சிரம்பணிந்து வணங்குகின்றனர் என்பதை நீர் காணவில்லையா?” (22:18)

“ஏழுவானங்களும் பூமியும் அவற்றிலிருப்பவைகளும் அல்லாஹ்வையே துதி செய்கின்றன. அவனது புகழைத்துதிக்காத எந்தப் பெருளும் கிடையாது. ஆனால் அவற்றின் துதியை நீங்கள் விளங்கிக் கொள்ள மாட்டீர்கள்” (அல் இஸ்ரா 44)

“வானங்கள் பூமியில் இருப்பவை விரும்பியும் விரும்பாமலும் அவனுக்குக் கட்டுப்படும் நிலையில் அல்லாஹ்வின் மார்க்கத்தை விட்டுவிட்டு ஏனையவற்றை விரும்புகின்றார்களா? அவனிடமே அவர்கள் கொண்டுவரப்படுவார்கள்” (ஆலஇம்ரான் 83)

இஸ்லாம் என்றால் கட்டுப்படுதல், அடிபணிதல் என்று பொருளாகும். பிரபஞ்சம் முழுவதும் அல்லாஹ்வுக்குக் கட்டுப்படுகின்றது. பிரபஞ்சம் முழுவதுமே இஸ்லாமிய மயமாகவே தோற்றமளிக்கின்றது.

இறைத்தூது மொத்த பிரபஞ்ச சட்டத்தில் ஒரு பகுதியாகும். அது மனித நடத்தையை ஒழுங்குபடுத்துவதற்கு அல்லாஹ்வால் வழங்கப்பட்ட வழிகாட்டலாகும். முழுப்பிரபஞ்சம் பின்பற்றும் அந்த வழிகாட்டலை மனிதன் பின்பற்றுவதுதான் நியாயமாகும். அதைக்கூட இறைவன் மனிதனின் சுதந்திர சிந்தனைக்கே விட்டுள்ளான்

“மார்க்கத்தில் நிர்ப்பந்தம் கிடையாது. வழிகேட்டிலிருந்து நேர்வழி தெளிவாகிவிட்டது.” (அல்பகரா 256)

ஆனால் விருப்பத்தோடு ஏற்றுக் கொண்ட இஸ்லாத்தை வீசி எறிவது மாபெரும் குற்றமாகும். முழுப்பிரபஞ்சத்திற்கும் எதிராகத்தொடுக்கும் யுத்தமாகும். பிரபஞ்சத்தின் பார்வையில் அவன் தண்டிக்கப்பட வேண்டியவன்.

பிபஞ்சம், வாழ்வு, மனிதன் பற்றிய கண்ணோட்டத்தின் அடியாக நோக்கும் போது றித்தா பற்றி இந்த முடிவுக்கே வரமுடியும். இதை மறுப்பதாயின் இஸ்லாத்தின் கோட்பாட்டை ஒருவர் மறுக்க வேண்டி ஏற்படும். அவ்வாறு மறுப்பவர் நிச்சயமாக நாஸ்திகவாதியாகவே இருப்பார். நாஸ்திகத்தை நாம் பொருட்படுத்த தேவையில்லை. ஏனெனில் அது ஒரு அறிவியல் உண்மையல்ல.

## றித்தா – ஒரு தேசத்துரோகம்

மேற்கத்திய சட்டத்தின் படி மதம் மாறியவர் தண்டிக்கப்படுவதில்லை. ஆனால் மேற்கத்திய சட்டப்படி ஒரு சமூகத்தில் நிலவும் ஆட்சி ஒழுங்குக்கு எதிரான கிளர்ச்சிகளில் ஈடுபடுபவர்கள் தண்டிக்கப்படுகின்றனர். கம்யூனிஸ ஆட்சி நிலவும் நாட்டில் அதற்கெதிராக ஒருவர் முதலாளித்துவத்தைக் கொண்டுவர முயற்சித்தால் அவர் தண்டிக்கப்படுவார். அவ்வாறே ஜனநாயக சிந்தனை நிலவும் நாட்டில் கம்யூனிஸத்தை நடைமுறைப்படுத்த முற்பட்டால் அது குற்றமாகக் கருதப்படும்.

ஒரு சமூகத்தில் நிலவும் ஆட்சி ஒழுங்குக் கெதிராக செய்யப்படும் கிளர்ச்சி எவ்வாறு மேற்கத்திய சட்டத்தில் குற்றமாகக் கருதப்படுமோ அவ்வாறே இஸ்லாமிய ஆட்சி நிலவும் சமூகத்தில் அதற்கெதிராக செயற்படுவதும் குற்றமாகக் கருதப்படுகின்றது. மேற்கத்திய சட்டத்திற்கும் இஸ்லாமிய சட்டத்திற்கும் இக்கொள்கையை நடைமுறைப்படுத்துவதில்தான் வேறுபாடு காணப்படுகிறதே ஒழிய இக்கொள்கையில் அல்ல என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். இஸ்லாமிய சட்டம் இஸ்லாத்தை ஆட்சி அல்லது சமூகவியல் ஒழுங்காகக் கருதுகின்றது. எனவே சமூகவியல் ஒழுங்கைக் காப்பாற்றிக் கொள்வதற்காக றித்தாவுக்கு தண்டனை வழங்குகின்றது. ஆனால் மேற்கத்திய சட்டம் மதத்தை ஆட்சி அல்லது சமூக ஒழுங்குக்குரிய அடிப்படையாக்க் கருதவில்லை. பல சமூகவியல் சிந்தனைகளில் அதையும் ஒன்றாகவே கருதுகின்றது. இதனால் மேற்கத்திய சட்டம் மதமாற்றத்தைத் தடுப்பதோ அதை பாரியவிடயமாக நோக்குவதோ கிடையாது. இந்தவகையில் மேற்கத்திய சட்டம் இஸ்லாமிய சட்டத்தைவிட்டும் வேறுபடுகின்றது.

ஒரு நாட்டுப்பிரஜை தனக்கு சுதந்திரம் இருக்கின்றது என்று நினைத்துக் கொண்டு எதிரிகளோடு சேர்ந்து சொந்தநாட்டுக் கெதிராகப் போராடுகின்றான் என்றால் எந்த அரசாவது அவனை மன்னிக்குமா? அவனைத் தேசத்துரோகி என்று நாம் குற்றம் சுமத்துவதில்லையா?

நாம் இக்காலம் உரிமைகளைப் பேசும் காலமாக இருந்தும் கூட தேசத்துரோகத்தை அங்கீகரிப்பதில்லை. நவீன அரசுகள் அனைத்தும் அதனைப் பாரிய குற்றமாக்க் கருதுகின்றன. இந்தவகையில் நோக்கும் போது றித்தா ஒரு தேசத்துரோகமாகும். எனவேதான் இஸ்லாம் அதற்கு கடுமையான தண்டனையை விதித்துள்ளது எனலாம்.

அதாவது றித்தா இறைவனுக்கும் அவனது பிரபஞ்சத்திற்கும் செய்யும் துரோகம் போன்றது அவனை ஏற்றுக் கொண்ட முஸ்லிம் சமூகத்திற்குச் செய்யும் துரோகமுமாகும். இஸ்லாமிய சமூகத்தின் அந்தரங்கங்களையும் அதன் இரகசியங்களையும் அறிந்தபிறகு அவன் எதிரிகளுக்குக் காட்டிக்கொடுத்து உதவப்போகின்றான். எனவே இவனை சும்மாவிடமுடியமா?

## றித்தா உயிருக்கு உத்தரவாதமளிப்பதில்லை

இஸ்லாமிய சட்டப்படி முர்தத் கொள்ளப்பட வேண்டியவராவார். அந்தக் கொலை இரண்டுவகையில் அமைய முடியும்.

ஒன்று, இஸ்லாத்தை தனது வாழ்க்கை நெறியாக ஏற்றுக்கொண்ட ஒருவர் அதன் நிழலில் பாதுகாப்புப் பெற்ற ஒருவராக மாறுகின்றார். அவர் மதமாறும் போது ஏற்கனவே அவருக்கிருந்த பாதுகாப்பு இல்லாமல் போகின்றது. அதன் பின் அவரது உயிருக்கு இஸ்லாம் உத்தரவாதமளிப்பதில்லை.

இறைத்தூதர் ஸல் அவர்கள் கூறியதாக இப்னு உமர் ரழி அவர்கள் அறிவிப்பதாவது “யார் அல்லாஹ்வைத்தவிர வேறு நாயன் இல்லை கூறுகின்றாரோ அவரது செல்வம், அவரது உயிர் அவற்றுக்குரிய பங்கை வழங்கும் பட்சத்தில் என்னால் பாதுகாக்கப்படும்” (புஹாரி, முஸ்லிம்)

இரண்டாவது, இஸ்லாமிய ஷரிஅத்தின்படி மதம்மாறியவருக்கான அதிகூடிய தண்டனையாக கொலையை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த வகையில் நோக்கும் போது மதம்மாறியவரின் உயிருக்கு உத்தரவாதமில்லை.

ஒருவர் முஸ்லிமாக இருக்கும் போது அவரை இஸ்லாம் பாதுகாக்கின்றது. அல்லாஹ்வை நிராகரிக்கும் போது அந்தப் பாதுகாப்பு இல்லாமல் போகின்றது. ஏனெனில் ரித்தா அதைக் கொண்டிருப்பவரைப் பாதுகாப்பதில்லை. அவர் திம்மியாக அல்லது ஒப்பந்தம் செய்தவராக இருப்பதன் மூலமே பாதுகாப்புப் பெறமுடியும். ஆனால் மதம்மாறியவர் இவற்றின் எந்தப் பிரிவிலும் அடங்கடமாட்டார்.

இந்த வகையில் மதம்மாறியவரை ஒரு தனிமனிதன் கொலை செய்தால் அவர் தண்டிக்கப்பட மாட்டார். அவர் மதம் மாறிய நிலையில் தொடர்ந்து இருக்கும் பட்சத்தில் அக்கொலை மன்னிப்புக் கேட்பதற்கு முன்போ, பின்போ இடம்பெற்றாலோ சரியே! அதாவது மதம் மாறியவருக்கான தீர்ப்பை வழங்குவதற்கு முன்னால் அவர் மன்னிப்புக் கேட்டு இஸ்லாத்திற்கு மீளுமாறு கோறப்படுவார். அவருக்கு புதிதாக இஸ்லாம் எத்திவைக்கப்படும். அவர் மீளாவிட்டால் தண்டனை நிறைவேற்றப்படும்.

அடிப்படையில் மதம்மாறியவரை கொலைசெய்வது இஸ்லாமிய அரசியல் பிரிவின் பொறுப்பாகும். அரசின் அவ்வுரிமையை தனிமனிதன் ஒருவன் நிறைவேற்றினால் நிர்வாக

ஒழுங்கை மீறிய குற்றத்திற்காக அவன் தண்டிக்கப்படுவானே ஒழிய கொலை செய்த்தற்றாக அல்ல.

இக்கருத்தை நான்கு மத்ஹபுகளில் மாலிக் மத்கபைத் தவிர மற்றெல்லோரும் ஒத்துக் கொள்கின்றனர். மாலிக் மத்ஹபைச் சார்ந்தோர் மதம் மாறியவர் பாதுகாப்பு இல்லாதவர் என்று சொல்லும் அதே நேரத்தில் அவரை கொலை செய்பருக்கு த஼ஃஸீர் (சீர்திருத்த) தண்டனை வழங்கப்படவேண்டும் என்றும் பைத்துல் மாலுக்கு நஷ்டஈடு வழங்கப்பட வேண்டும் என்றும் கூறுகின்றனர். மதம் மாறியவர் பாவமன்னிப்புக் கேற்பதற்கு சந்தர்பம் வழங்கப்பட வேண்டும் என்பதே இவர்களது வாதமாகும்.

இவர்கள் தொடர்ந்து இதை விளக்கும் போது மதம் மாறியபின் ஒருவர் காபிராக்க் கருதப்படுவார். எனவே அவரைக் கொலை செய்வது காபிரைக் கொலை செய்வதைப் போன்றதாகும். காபிரைக் கொலை செய்வது தடுக்கப்பட்டிருப்பதால் அவர் பைதுல்மாலுக்கு நஷ்டஈடு கொடுக்க வேண்டும். அவர் மதம்மாறியபின் வாரிசாக்க் கருதப்படுவதே அதற்குக் காரணமாகும். இவர்களின் சிந்தனை முர்த்த், பாதுகாப்பு இல்லாதவர் என்ற கருத்தை மறுப்பதாகவே அமைகின்றது.

மதமாறியவரை கொலை செய்யவேண்டிய பொறுப்பு அரசுக்கு அளிக்கப்பட்டுள்ளது என்று பார்த்தோம். இன்று எகிப்து போன்ற நாடுகளில் நடப்பதைப் போல மதம் மாற்றத்திற்கான தண்டனை வழங்கப்படாத போது தனிமனிதன் அதனை நிறைவேற்றினால் அதற்காக அவன் தண்டிக்கப்படக்கூடாது. இந்நிலையில் அவன் அரசின் பொறுப்பில் தலையிட்டதாக கருதப்படுவதில்லை. மாறாக அரசு இறை சட்டத்தை நடைமுறைப்படுத்தாத போது தனிமனிதன் அதனை நிலைநாட்டினான் என்றே கருதப்படும்.

ஷாபி மத்ஹபைச் சார்ந்த அறிஞர்களிடம் பொதுவான விதி ஒன்று காணப்படுகின்றது. “பாதுகாப்பில்லாத மதம்மாறியவர் அவரைப் போன்ற மதம் மாறியவர்கள் மத்தியில் பாதுகாக்கப்பட்டவராகவே கருதப்படுகின்றார். அதாவது மதம் மாறியவருக்கு மதம்மாறியவரைக் கொலை செய்ய முடியாது. கொலையாளி இஸ்லாத்தைத் தழுவினாலும் அவர் வேண்டுமென்று கொலை செய்தவராக்க் கருதப்படுவார். ஆனால் ஒரு முஸ்லிம் மதம் மாறியவரை கொலை செய்வதை அவ்வாறு நோக்கப்படுவதில்லை. ஒரு திம்மி மதம்மாறியவரைக் கொலை செய்தால் அவரும் தண்டிக்கப்படுவார். கொலைத் தண்டனை விதிக்கப்பட்ட எல்லோருக்கும் ஷாபிஈக்கள் இந்த விதியையே பிரயோகிக்கின்றனர். ஆனால் ஏனைய இஸ்லாமிய சட்ட அறிஞர்கள் இந்த விதியை ஏற்றுக் கொள்வதில்லை.

இஸ்லாமிய சட்டப்படி முர்த்த்தைக் கொலை செய்வது ஒவ்வொரு முஸ்லிம் மீதும் – உரிமை இல்லாவிட்டாலும் – கடமையாக்க் கருதப்படுகின்றது. மதமாற்றம் வரையறுக்கப்பட்ட தண்டனையைச் சேர்ந்தது. எனவே அதனை நிறைவேற்றுவது கடமையாகும். அதை மன்னிப்பதற்கோ அல்லது பிற்படுத்துவதற்கோ யாருக்கும் அனுமதி கிடையாது. அரசு பொறுப்பெடுப்பதால் தனிமனிதர்களது கடமை நீங்கிவிடவும் மாட்டாது.

எகிப்திய குற்றவியல் சட்டத்தில் மதம்மாறியவர்களுக்கான தண்டனை பற்றி குறிப்பிடப்படாவிட்டாலும் ஷரிஅத் ஏற்றுக் கொள்ளக்கூடிய செயலை நல்லெண்ணத்தோடு

செய்தால் அவர் மீது குற்றமில்லை என்று அறுபதாம் இலக்க குற்றவியல் சட்டம் கூறுகின்றது. இது முர்த்த்த்தைக் கொலைசெய்தவரை மன்னிக்கப் போதுமான சட்டமாகும்.

மதம்மாறியவர் கொலை செய்யப்படுவதை இஸ்லாம் ஆகுமாக்கியுள்ளது. மதம்மாறியவரைக் கொலைசெய்வது கடமைதானே ஒழிய உரிமையல்ல என்றாலும் எல்லாக் கடமைகளையும் உரிமைகளுக்குச் சமனாக அவற்றைவிட கூடிய தரத்தில் வைத்தே நோக்கப்படும். எனவே அச்செயலை நோக்கினாலும் அச்செயலில் ஈடுபடுபவரை நோக்கினாலும் இரண்டும் சமன் என்பதைப் புரிந்து கொள்ள முடியும். அக்குறிப்பிட்ட செயலை நோக்கினால் உரிமை அல்லது கடமை என்ற இரு நிலைகளிலும் அச்செயல் ஆகுமானது.

அச்செயலை செய்தவரைப் பொறுத்தவரையில் குற்றவாளியாக்க் கருதவும் முடியாது. அவர் தமது கடமையைத்தான் நிறைவேற்றினார். உரிமையைவிட கடமை பொறுப்புவாய்ந்ததாகும். பொறுப்பு ஒப்படைக்கப்பட்டவர் தனது பொறுப்பை அல்லது கடமையை நிறைவேற்றியாக வேண்டும். ஆனால் உரிமையைப் பொறுத்தவரையில் அதைப் பிரயோகிக்கவும் முடியும். கடமைக்கும் உரிமைக்குமிடையிலான வேறுபாடு பொறுப்புச் சாட்டப்பட்டவர் அதனை விட்டுவிடுகின்ற கட்டத்தில்தான் தெளிவாகத் தெரிகின்றது. கடமையைச் செய்யத் தவறுகின்றவர் தண்டனைக்குறப்படுவார். உரிமையைப் பயன்படுத்தாவிட்டால் அவ்வாறு தண்டிக்கப்படுவதில்லை.

எகிப்திய குற்றவியல் சட்டத்தின் ஏழாவது பகுதி இவ்வாறு கூறுகின்றது. “இஸ்லாமிய ஷரிஅத் சட்டத்தில் காணப்படும் தனியார் தொடர்பான சட்டங்கள் எந்த நிலையிலும் செயலிழக்கப்பட மாட்டாது. தனிமனிதர்களுக்கு விதிக்கப்பட்டுள்ள கடமைகள் அனைத்தும் உரிமைகளைப் போன்றவைகளே! மருத்துவம் செய்வதே மருத்துவர் மீதுள்ள கடமையாகும். இந்தக் கடமை நோயாளியின் காயத்துக்கான பொறுப்புரிமையை உண்டாக்குகின்றது. இவ்வாறே மதம்மாறியவரைக் கொலை செய்வது ஒவ்வொரு தனிமனிதன் மீது கடமையாக இருக்கின்றது. அந்தக் கடமை நிறைவேற்றப்படாத விடத்தில் சட்டம் இயற்றியோனின் (அல்லாஹ்வின்) முன்னால் பதில்சொல்ல வேண்டிவரும்.

இதன் கருத்து இஸ்லாம் கொடுத்த சுதந்திரத்தை பறிக்கின்றது என்பதல்ல. இஸ்லாம் தாராளமாக விமர்சிப்பதற்கு உரிமை கொடுத்துள்ளது.

சமூகநலனோடு, ஒழுக்கப்பண்பாடுகளோடு தொடர்பான விடயங்களில் ஒருவர் தாராளமாக விமர்சிக்கலாம். ஏனெனில் சத்தியத்தை யாருக்கும் பயப்படாமல் துணிவோடு எடுத்துரைப்பதை இஸ்லாம் கடமையாக்கியுள்ளது. நன்மையை ஏவி தீமையைத் தடுப்பது உரிமைமட்டுமல்ல. ஒவ்வொரு இஸ்லாமியரதும் கடமையாக இஸ்லாம் கருதுகின்றது. ஒருவரின் மௌனம் சமூகத்தைப் பாதிக்கின்றது என்றால் அவரை இறைவனே கண்டிக்கின்றான்.

இஸ்லாத்தில் நுழைந்த ஒருவர் கைகட்டி வாய்பொத்தி சும்மா இருக்க வேண்டுமென்பதில்லை என்பது இஸ்லாத்தின் கருத்தாகும். அனுமதி எடுத்துக்கொண்ட பிறகுதான் பேசவேண்டும் என்று இஸ்லாம் மனிதர்களின் வாய்க்கு கடிவாளம்

இடவில்லை. பிர்அவ்னைப் போன்ற அராஜக அரசுகளில்தான் அவ்வாறு நடக்கும். இஸ்லாமிய அரசியலில் அல்ல என்பதை குர்ஆன் சொல்கிறது.

“நான் உங்களுக்கு அனுமதியளிப்பதற்கு முன்னால் நீங்கள் மூஸாவை ஈமான் கொண்டு விட்டீர்களே! என்று பிர்அவ்ன் கூறினான்.” (அல் அஃறாப் 123)

அன்று பிர்அவ்னுடைய அனுமதியைப் பெற்றுத்தான் மனிதர்கள் பேசவேண்டியிருந்தது. இஸ்லாம்தான் அந்த நிலையை மாற்றியமைத்தது.

அப்பாஸ் மஃமூத் அல் அக்காத் என்ற இஸ்லாமிய அறிஞர் “இஸ்லாத்தில் சிந்திப்பது மார்க்கக் கடமை” என்று ஒரு நூலையே எழுதியுள்ளார். எனவே ஒரு முஸ்லிம் சத்தியத்தைத்தான் ஏற்றுக் கொள்ள வேண்டும். அவன் ஏற்றுக் கொண்டுள்ள நம்பிக்கையை ஆயுதத்தைப் பயன்படுத்தியாவது தற்காத்துக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் மத சுதந்திரம் வழங்கியதில் அர்த்தமில்லாமல் போய்விடும். இக்கருத்தை குர்ஆன் பின்வருமாறு கூறுகின்றது,

“அல்லாஹ் மனிதர்களில் சிலரைக் கொண்டு சிலரைத் தடுக்காது விட்டிருப்பின் ஆசிரமங்களும், கிறிஸ்தவக் கோயில்களும் யூதர்களின் ஆலயங்களும் அல்லாஹ்வின் திருநாமம் நினைவு கூறப்படும் மஸ்ஜிதுகளும் அழிக்கப்பட்டுப் போயிருக்கும்” (அல் ஹஜ் 40)

இந்த அடிப்படையில்தான் இஸ்லாம் மனிதனுக்கு சுதந்திரத்தைக் கொடுத்துள்ளது. இந்த வசனத்தின் பின்னணியில்தான் இஸ்லாத்தின் சுதந்திரங்களும் உரிமைகளும் நோக்கப்பட வேண்டுமேயொழிய இன்றுள்ள கருத்தில் அல்ல. இஸ்லாம் வழங்கிய சுதந்திரம் அல்லது உரிமை நன்மைக்கே அல்லாமல் பாவத்திற்கும் தீமைக்கும் அல்ல. இஸ்லாம் வழங்கிய உரிமை காக்கப்பயன்பட வேண்டுமேயொழிய ஒன்றை அழிக்கப்பயன்பட கூடாது.

## மேற்கின் பார்வையில் சுதந்திரம்

இன்று தனிமனித சுதந்திரம் என நினைத்துக் கொண்டு விபசாரம் போதைவஸ்துப் பாவனையும் அனுமதிக்கப்படுகின்றது. எத்தனையோ பெரும்பாவங்களை ஒருவன் புரிந்தாலும் அதற்கு சூட்டப்படும் பெயர் ‘தனிமனித சுதந்திரம்‘ என்பதாகும். அதாவது தனிமனிதன், அவனது உடலை சீரழித்தல், அவனது உள்ளத்தை சீரழித்தல், ஒழுக்கங்களை மீறி நடத்தல், அவனது குடும்பத்தை அழித்தல் அதற்குத்தான் மேற்குலகில் சுதந்திரம் என்று அர்த்தமாகும்.

சுதந்திரம் என்பதற்கு இதுதான் அர்த்தமென்றால் இஸ்லாம் கூறும் சுதந்திரத்திற்கு இந்த அர்த்தம் கிடையாது. இஸ்லாம் வழங்கும் சுதந்திரத்தின் மீதுதான் மனித வாழ்வு எழுந்து நிற்கின்றது. ஆனால் ஒருவர் அனுபவிக்கும் சுதந்திரத்தின் மூலம் அடுத்தவரின் சுதந்திரம் பாதிக்கப்படக் கூடாது. அவர் பாதிக்கப்படும் போது இஸ்லாம் அதற்குரிய தண்டனையை

வழங்குகின்றது. அடுத்தவரின் சுதந்திரம் தடைப்படும் அளவிற்கு ஒருவனது சுதந்திரம் செல்லுமானால் அதை வரையறுக்க வேண்டுமென இஸ்லாம் கருதுகின்றது.

ஒருவனுக்கு பாதையில் நடப்பதற்கு உரிமை இருக்கின்றது. ஆனால் பாதைக்குரிய விதிமுறைகளை அவன் பேணவேண்டும். பாதசாரிகளையோ, வாகனங்களையோ அவன் மோதவோ முட்டவோ கூடாது. சிவப்பு அடையாள விளக்கில் அவன் நிற்க வேண்டும். வலது பக்கம் நடக்க வேண்டும். இங்கு பொதுநலன் கருத்தில் கொள்ளப்பட்டு தனிமனித உரிமை வரையறுக்கப்படுவதைக் காணலாம். இந்த வகையில் தான் இஸ்லாத்தின் சட்டங்களையும் நோக்க வேண்டும்.

கொடுத்தாலும் கொடுக்காவிட்டாலும் இது மனித உரிமைகளைப் பேசுகின்ற காலமாகும். மனித உரிமையை மனிதனின் அடிப்படை உரிமைகளில் ஒன்றாக ஐக்கியநாடுகள் சபை அங்கீகரிக்கின்றது. அப்படி வைத்துப்பார்த்தாலும் நூறு கோடிக்கு மேற்பட்ட ஏகத்துவக் கொள்கையினைப் பின்பற்றுகின்ற மனிதர்களின் மதத்தை இழிவுபடுத்துவதற்கும் இம்சிப்பதற்கும் ஒருவன் தனது எழுத்துச் சுதந்திரத்தைப் பயன்படுத்துகின்றானென்றால் அதற்குப் பெயர் எழுத்துச் சுதந்திரமா? ஒருவன் தடியைச் சுற்றி விளையாடலாம். ஆனால் அந்தத்தடி அடுத்தவனின் மேனியில் பட்டு காயத்தை ஏற்படுத்துமானால் அதற்குப் பெயர் சுதந்திரமல்ல. அது உரிமைத் துஷ்பிரயோகமாகும்.

சுதந்திரம் என்ற பெயரில் இன்று மேற்குலகில் உரிமைத்துஷ்பிரயோகங்கள் நிகழ்ந்துகொண்டிருக்கின்றன. அதன் பிரதிபலிப்புத்தான் ‘சாத்தானிய வசனங்கள்‘ போன்ற பெயர்களில் வெளிவந்து கொண்டிருக்கும் நூல்களாகும்.

மேற்குலகில் இறை நம்பிக்கை மருந்துக்கும் கிடையாது. எனவே, அவர்கள் கடவுளை மதிப்பார்கள் என நாம் எதிர்பார்க்க முடியாது. மனித சமூகத்தின் ஒரு கட்டத்தில் வழிகாட்டியாக வந்த மர்யமின் மஸீஹ் ஒரு பெண்ணோடு கடற்கரையில் கொஞ்சிக் குலாவும் காட்சி படமாக்கப்பட்டது. இதற்கெதிராக விரல்விட்டு எண்ணத்தக்க ஒரு சில பாதிரிமார்கள்தான் குரல் எழுப்பினார்கள். பின்னர் கருத்துச் சுதந்திரம் என்ற பெயரில் அப்பாதிரிகளின் குரல்வலைகள் நசுக்கப்பட்டன. இறைவனைத் தூற்றும் போது, அவனது தூதர்களை இழிவுபடுத்தும் போது, அவர்களது வழிகாட்டல்களை தகர்தெறியும் போது முஸ்லிம்களும் மற்ற சமயத்தவரைப் போல் கைகட்டிப் பார்த்துக் கொண்டிருக்க வேண்டுமென மெற்குலகம் நினைப்பது எவ்வளவு பெரிய மடத்தனமாகும்?

இந்துக்களின் நக்கீரர் ஒரு பெரிய கவிஞர். ஒருமுறை அவருக்கும் சிவனுக்குமிடையில் ஒரு வாக்குவாதம் ஏற்பட்டது. பெண்ணின் கூந்தலில் மணமுண்டா? இல்லையா என்பதே வாதத்துக்கான தலைப்பாகும். சிவன் இருப்பதென்று வாதாடினார். நக்கீரர் இல்லை என்று வாதாடினார். சிவன் தோற்றுப் போய் எதிரே இருந்த நக்கீரரை எதிர்ப்பதற்காக நெற்றிக்கண்ணைத் திறந்தார். அப்போது நக்கீரர் “நெற்றிக் கண் திறப்பினும் குற்றம் குற்றமே!” என்றார். பாருங்கள்! கடவுளையே குற்றம் கண்டுபிடிக்கும் நிலைக்கு கீழைத்தேய மனிதன் வந்துவிட்டான்.

கடவுளுக்கு கௌரவமளிப்பது இன்று அருகி வருகின்றது என்பதற்கு சீனாவில் நடந்த இச்சம்பவம் நல்ல உதாரணமாகும்.

ஒரு மழைக்காலத்தில் எங்கிருந்தோ ஒரு புத்தமதத்துறவி நனைந்து கொண்டே வந்தார். வந்தவர் ஒரு புத்த ஆலயத்தைக் கண்டார். அங்கிருந்த தலைமைத் துறவியிடம் இன்றிரவு மாத்திரம் இங்கு தங்கிக் கொள்கிறேன் என்றார். மழைக்காக ஒதுங்க வந்த புதிய துறவி ஆலயத்தில் என்ன செய்கிறார் என்பதை அறிய தலைமைத்துறவி எட்டிப்பார்த்தார். அவருக்குத் தூக்கிவாரிப்போட்டது. காரணம் உள்ளே நெருப்பு எரிந்து கொண்டிருக்கிறது. புதிய துறவி அந்த நெருப்பில் குளிர்காய்ந்து கொண்டிருந்தார்.

"நெருப்புக்கு விறகு ஏது?" என்று கேட்டபோது ஆலயத்தில் இருந்த புத்தரின் மரச்சிலைதான் என்றார். இந்த வார்த்தைகள் தலைமைத்துரவிக்கு இடிவிழுந்தமாதிரி இருந்தது.

பார்த்தீர்களா? புத்தரையே எரித்து குளிர்காயும் நிலைக்கு பௌத்தன் வந்துவிட்டான்.

தான் காதலில் தோற்றுப் போனதற்காக "பெண்ணைப் படைத்து கண்ணைப்படைத்த இறைவன் கொடியவனே!" என்று கடவுளைச் சாடியிருக்கிறார் ஒரு நவீன தமிழ்க் கவிஞர்.

இந்த ஒழுக்கமற்ற வார்த்தைகளை இஸ்லாமியனும் பேசவேண்டுமென நினைப்பது தவறாகும். மாற்று மதத்தவர்கள் தமது மதங்களை தாமே எள்ளி நகையாடுகின்றார்கள் என்பதற்காக முஸ்லிம்களும் அப்படி இருக்க வேண்டுமென நினைப்பது நியாயமாகுமா?

# இவர்களை என்ன செய்யலாம்?

'றித்தா' என்பது மொழியில் முன்னைய நிலைக்கு மாறித் திரும்பிச் செல்வதைக் குறிக்கும். 'இர்தத்த அன் ஸபரிஹி' பிரயாணத்திலிருந்து திரும்பினான் என்பது பொருளாகும். 'றித்தா' என்ற இச்சொல் இஸ்லாமிய பரிபாஷையில் இஸ்லாத்தைத் தழுவிய பின் இறை நிராகரிப்புக்கு திரும்பிச் செல்வதைக் குறிக்கும்.

முர்தத்துக்கான – மதம் மாறியவருக்கான தீர்ப்பு, கொலை செய்வதாகும். இதுபற்றி இறைத்தூதர் (ஸல்) அவர்கள் சொல்லும் போது "யார் தனது மார்க்கத்தை மாற்றிக் கொள்கிறாரோ அவரைக் கொலை செய்யுங்கள்" (அல் முஹல்லா பாகம் 11 பக்கம் 129)

இப்னு மஸ்ஊத் (றழி) அவர்கள் அறிவிப்பதாவது "அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை என்று சாட்சியம் கூறிய முஸ்லிமின் இரத்தம் பின்வரும் மூன்று நிலைகளில் அல்லாமல் சிந்தப்படுவது கூடாது. ஈமான் கொண்ட பிறகு நிராகரித்த மனிதன், திருமணம் முடித்த பிறகு விபசாரத்திலீடுபட்ட மனிதன், ஒருவனை கொலை செய்த மனிதன்" (ஆதாரம் திர்மிதி)

கலீபா உஸ்மான் (றழி) அவர்கள் புரட்சியாளர்கள் சுற்றி வளைக்கப்பட்டு வெளியேற முடியாமல் வீட்டிலிருக்கும் போது இதே ஹதீஸைச் சொன்னார்கள். இமாம்களான புஹாரி, முஸ்லிம் ஆகியோர் "மார்க்கத்தை விட்டுவிட்டு, முஸ்லிம் சமூகத்தைவிட்டுப் பிரிந்து சொல்பவன்" என்று ஒரு சிறிய மாற்றத்தோடு இதே ஹதீஸைக் குறிப்பிட்டுள்ளனர்.

அல்லாஹுத்தஆலா விதியாக்கியவற்றில் கொஞ்சத்தை மறுப்பவனும் நிராகரித்துவிட்டான். அல்லது இஸ்லாத்தை விட்டும் நீங்கிவிட்டான் என்பது இஜ்மாவான – ஏகோபித்த முடிவாகும். சட்டவசனத்தைப் பற்றி அறியாத நிலையில் ஒருவன் கடமைகளை மறுத்தால் அது அவனுக்கு எத்திவைக்கப்படும். ஆதாரங்களை முன்வைத்து தெளிவாக விளங்கப்படுத்திய பிறகும் ஒருவன் பிடிவாதம் காரணமாக மறுப்பின் அப்போதுதான் அவன் 'காபிர்' அல்லது 'முர்தத்' என்று அழைக்கப்படுவான்.

மதம் மாறுவோர் தமது மாற்றத்தை வார்த்தை மூலம்தான் அறிவிக்க வேண்டுமென்பதில்லை. அவரது செயலும் மதமாற்றத்தை உணர்த்தலாம்.

மதமாற்றத்தைக் குறிக்கும் வார்த்தை எந்த உருவத்திலும் வெளிப்பட முடியும். எழுத்தாக்கமாக இருப்பின் அது நூலாக, கட்டுரையாக, பத்திரிகைப் பேட்டியாக, நாவலாக, சிறுகதையாக, நாடகமாக, கவிதையாக அல்லது உத்தியோகபூர்வ அறிக்கையாக, சட்டமாகக்கூட வெளிவரலாம். இவையெல்லாம் மொழியில் வார்த்தையாகவே கருதப்படுகின்றது.

மதம் மாறியவர் காபிர் அல்லது முர்தத் என்பது இஜ்மாவான – ஏகோபித்த முடிப்பது போல அவரது வார்த்தையை விளங்கிக் கொள்வதில் சிலபோது கருத்துவேறுபாடு தோன்றலாம். அவர் மறுக்கின்றாரா? இல்லையா? என்பதைத் தீர்மானிக்க முடியாமல் போகலாம்.

எனவே அடிப்படையில் கலிமாவை மொழிந்தவர்கள் எல்லோரும் முஸ்லிம் என்ற கருத்தை மறந்துவிடக்கூடாது. அடிப்படையில் இஸ்லாத்தோடு இணைந்திருந்த ஒருவர் அதைவிட்டு வெளியேறிச்செல்கிறார் என்பதை திட்டவட்டமான ஆதாரமில்லாது வெறும் உத்தேசக் கருத்தின் அடிப்படையில் நிறுவக்கூடாது. மதம் மாறியவரின் வார்த்தை வேறு விளக்கங்கள் எடுக்கமுடியாத அளவுக்கு திட்டவட்டமான கருத்தை தரக்கூடியதாக இருக்க வேண்டும்.

இப்போது மதம் மாறியோர் தொடர்பாக இஸ்லாமிய சட்ட அறிஞர்கள் என்ன கருத்தைக் கொண்டுள்ளனர் என்பதை நோக்குவோம்.

பெரும்பாலான சட்ட அறிஞர்களின் கருத்துப்படி மதம் மாறியோர் கொலை செய்யப்பட வேண்டும். இமாம் அபூஹனீபாவின் கருத்துப்படி ஆண் மதம் மாறினால் அவன் கொலை செய்யப்பட வேண்டும். ஆனால் பெண் மதம் மாறினால் அவளுக்கு ஆயுள் சிறைத்தண்டனை வழங்கப்பட வேண்டும். அதே வேளை சிறையில் வைத்து அவளுக்கு இஸ்லாத்தைப் பற்றி விரிவாகச் சொல்லி அவளை இஸ்லாத்தின் பால் சேர்ப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அவள் இஸ்லாத்திற்குத் திரும்பிவர மறுத்தால் அவளைத் தொடர்ந்து சிறையிலேயே வைக்க வேண்டும்.

மதம் மாறிய ஆணுக்கு கொலைத் தண்டனை வழங்கக் காரணம் அவன் இஸ்லாத்திற்கு எதிரான செயற்பாடுகளில் ஈடுபடுவான். ஒரு பெண் மதம் மாறினால் ஆணைப் போன்று அவள் இஸ்லாத்திற்கெதிராக துணிகரமாக செயற்படுவாள் என்று நாம் எதிர்பார்க்க முடியாது. எனவே அவளைக் கொல்லக்கூடாது. அவளை எப்படியாது முஸ்லிமாக மரணிக்கச் செய்ய வேண்டும் என இமாம் அபூஹனீபா கூறுகின்றார்.

சில சட்ட அறிஞர்களின் கருத்துப்படி மதம் மாறியவருக்கு கொலைத்தண்டனையே வழங்க வேண்டுமென்பதில்லை. சந்தர்ப்ப சூழ்நிலைகளைக் கருத்திற்கொண்டு தண்டனையைத் தீர்மானிக்க முடியும்.

இவர்கள் இவ்வாறான கருத்தைக் கொண்டிருப்பதற்கு பின்வருமாறு விளக்கமளிக்கின்றனர். “யார் தனது மார்க்கத்தை மாற்றிக் கொள்கின்றாரோ அவரைக் கொலை செய்யுங்கள்” என்ற கருத்தில் வருகின்ற ஹதீஸ்கள் யாவும் இறைத்தூதர் (ஸல்) அவர்கள் இஸ்லாமிய அரசுத்தலைவர் என்ற ரீதியில் பிறப்பித்த ஒரு சட்டமாகும். இறைத்தூதர் அல்லது நபி என்ற நிலையிலிருந்து சொல்லியிருப்பின் அதனைப் பின்னால் வருகின்ற இஸ்லாமிய அரசுத்தலைவரும் பின்பற்ற வேண்டிவரும். அனால் இந்த ஹதீஸ்கள் யாவும் ஆட்சியாளன் என்ற ரீதியில் கூறப்பட்டிருப்பதால் சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கு ஏற்ப றித்தாவுக்கான தண்டனையும் மாறிச் செல்லலாம் என்பது இவர்களின் கருத்தாகும்.

இவற்றைப் பார்க்கும் போது றித்தாவுக்குரிய தண்டனை கொலை என்றும் அல்லது ஆணுக்கு கொலையும் பெண்ணுக்கு ஆயுள் சிறை என்றும் அல்லது இஸ்லாமிய ஆட்சித்தலைவர் அல்லது இஸ்லாமிய நீதிமன்றம் விதிக்கும் தண்டனை என்றும் பல்வேறு கருத்துக்கள் நிலவுவதை நாம் பாரத்தோம். ஆனால் முர்தத் ஒரு தேசத்துரோகி என்பதிலும் அவர் தண்டிக்கப்பட வேண்டியவர் என்பதிலும் யாரும் கருத்து வேறுபாடு கொண்டுள்ளதாகத் தெரியவில்லை. அவர் தன் தவறை ஒப்புக் கொண்டு, மனம் மாறித் திருந்திவிடவேண்டும் என்பதற்காகத்தான் இஸ்லாமிய சட்ட அறிஞர்கள் தண்டனையை வரையறுப்பதில் இந்தளவு தூரம் நெகிழ்ந்து கொடுத்துள்ளதாகத் தெரிகின்றது.

அதேநேரம் நாம் இன்னொன்றையும் புரிந்து கொள்ள வேண்டும். இஸ்லாம், குற்றங்களுக்கான தண்டனையை வழங்குவதற்கு முன்னால் குற்றங்கள் நிகழா வண்ணம் நல்லதொரு இஸ்லாமிய சூழலை உருவாக்க விரும்புகின்றது. அச்சூழலில் இஸ்லாமிய சட்டங்களும், இஸ்லாமிய வாழ்க்கை முறையும் போதிக்கப்படும். இஸ்லாமிய சமூகத்திலிருக்கும் பள்ளிவாயல்களும் பாடசாலைகளும் வீடுகளும் தொலைத்தொடர்பு சாதனங்களும் இதற்காகப்பயன்படுத்தப்படும்.

எனவே இஸ்லாமிய சமுதாயத்திலிருக்கின்ற ஒவ்வொருவரும் இஸ்லாத்தைப் பற்றிய தெளிவான கருத்தைக் கொண்டிருப்பான் என்று பெரும்பாலும் கூறமுடியும். ஆனால் இஸ்லாத்தின் சட்டங்களையும் போதனைகளையும் அறியாத நிலையில் ஒருவர் குற்றமிழைத்தால் அவருக்கு இஸ்லாமிய சட்டப்படி குறிப்பிட்ட தண்டனை வழங்கப்பட மாட்டாது.

ஒருவர் குற்றமிழைத்ததற்கான காரணங்களை ஆராய்ந்து கொண்டு போகின்ற போது ஏதேனும் சந்தேகங்கள் எழுந்தால் இஸ்லாம் குறிப்பிட்ட தண்டனையை நீக்கி வேறு சீர்திருத்த தண்டனைகளையே வழங்கும். ஏனெனில் சந்தேகங்களின் அடிப்படையில் வரையறுக்கப்பட்ட தண்டனைகள் நீக்கப்படும்” என்று இஸ்லாத்தின் குற்றவியல் சட்டத்தில் தனியான ஒரு விதியே காணப்படுகின்றது.

இந்தக் கருத்துக்களின் பின்னணியில் சகோதரர் சல்மான் ருஷ்தி, சகோதரி தஸ்லிமா நஸ்ரீன் போன்றோரின் பிரச்சினைகள் நவீன காலத்தில் எவ்வாறு அணுகப்பட வேண்டும் என்பதை நோக்குவோம்.

இந்த சகோதரனும் சகோதரியும் முஸ்லிம்களைச் சார்ந்தோர் என இனங்காணப்படுவதனையே 'இஸ்லாத்தின் கருத்துச் சுதந்திரம்' பற்றிய இவ்வாய்வில் இவ்விருவரையும் இணைத்துக் கொள்ள விரும்பினோம். மாறாக இவ்விருவருக்கும் மார்க்கத் தீர்ப்பு வழங்குவதற்காக அல்ல என்பதை வாசகர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

அத்தோடு மேற்குலகம், கீழைத்தேய மதங்களையும் கொள்கைகளையும் விமர்சிக்கின்ற அல்லது எதிர்க்கின்றவர்களை ஊக்குவித்து அவர்களுக்குப் புகலிடம் அளித்து பாதுகாத்து வருகின்றதென்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது. இவ்விருவரையும் பொறுத்த வரையில் மேற்குலகின் கையிலிருக்கும் தொலைத்தொடர்பு சாதனங்களும் என்ன பாடுபடுகின்றன என்பதை நாம் அன்றாடம் அறியக்கூடியதாகவும் இருக்கின்றது.

இந்நிலையில் முஸ்லிம்களாகிய நாம் இவர்களை என்ன செய்யலாம்? கொலைத்தண்டனை விதித்து கொக்கரிப்பதா? கருத்துச் சுதந்திரம் என்ற பெயரால் இஸ்லாத்தின் குரல்வளையைக் கடிப்பதற்கு விட்டுவிடுவதா?

பின்வரும் கருத்தை நாம் எல்லோரும் கண்டிப்பாக ஏற்றுக்கொள்ள வேண்டும். நாம் இஸ்லாத்தின் இரண்டாவது அறிமுகமற்ற காலப்பிரிவில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இந்த அறிமுகமற்ற நிலை இஸ்லாத்திற்குள்ளேயும் இஸ்லாத்திற்கு வெளியேயும் இருக்கின்றது. அதாவது இஸ்லாத்தின் போதனைகளைப் பொறுத்தவரையில் முஸ்லிம்களும் முஸ்லிமல்லாதவர்களும் அந்நியர்களாகவே இருந்து வருகின்றனர். நவீனகாலத்தில் இஸ்லாத்தின் இரண்டாவது அறிமுகமற்ற நிலையை நீக்குவதே எமது மிகப்பெரிய பணி என்பதையும் நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

இஸ்லாம், ஆட்சி பீடத்திலிருந்த ஒரு காலம் இருந்தது. அன்று இஸ்லாமிய சிந்தனையும். அதன் வாழ்க்கை முறையும் எல்லோருக்கும் அறிமுகமாக இருந்தது. அப்போது இஸ்லாத்தினுள்ளே வர விரும்பியவர்களும் அவையனைத்தையும் அறிந்துதான் வந்தார்கள். இன்று அந்த நிலை இல்லை. 1924ம் ஆண்டோடு பேரளவிலிருந்த இஸ்லாமிய கிலாபத் ஆட்சியும் பறிபோய்விட்டது. கிலாபத் கொடியின் கீழ் ஒன்றாக வாழ்ந்த நாம் இன்று 57 நாடுகளாகப் பிரிந்திருக்கின்றோம்.

இந்த லட்சணத்தில் “என் வீட்டுப் பிரச்சினை தானே! நான் எப்படியும் தீர்க்கலாம்” என்று நினைத்தால் அது பாரிய எதிர்விளைவுகளையே இஸ்லாத்திற்குத் தேடித்தரும். எனவேதான் இதுபோன்ற பிரச்சினைகளை நிதானமாக நவீன காலத்தில் அணுக வேண்டியிருக்கிறது.

அதாவது சகோதரர் சல்மான் ருஷ்தி, நபி (ஸல்) அவர்களையும் அவரது வேதத்தையும் அவரது குடும்பத்தையும் முன்னைய இறைத்தூதர்களையும் இழிவுபடுத்தி படுமோசமாகத் தூற்றியிருக்கிறார். அவரது சமகால எதிரிகள் வசைபாடாத அளவுக்கு இவர் பலபடிகள் மேலே சென்று பாடியிருக்கிறார். இதைக் கருத்துச் சுதந்திரமென்று இவரும் இவரது சகபாடிகளும் கூறிக்கொள்கின்றனர். இந்நிலையில் என்ன செய்வது?

நாமும் பெயரளவிலாவது கருத்துச் சுதந்திரம் என வைத்துக் கொண்டு, நபி (ஸல்) அவர்களது தூயவாழ்வை எடுத்துச் சொல்வதற்குக் கிடைத்த வாய்ப்பாக இதனை கருதவேண்டும், நபிகளாரின் வாழ்வை குர்ஆனிலிருந்தும் ஹதீஸ்களிலிருந்தும் இஸ்லாமிய அறிஞர்களின் கருத்துக்களிலிருந்தும் தெளிவாக முன்வைக்க வேண்டும். இவ்வாறு கருத்து ரீதியாக போராடி அவரது கருத்தப் பலவீனத்தை அவருக்குப் புரியவைக்க வேண்டும்.

அதேபோன்று சகோதரி தஸ்லீமா நஸ் ரீன் பெண்களுக்கு விடுதலை வேண்டும் என்ற அவசரத்தில் இஸ்லாத்தின் ஆடைகளையே அவிழ்த் தெறிந்துவிடும் நிலை வந்துவிட்டது.

பெண்கள் உரிமை கேட்டுப் போராடும் நிலையை இஸ்லாம் இடம் வைக்கவில்லை. பெண்கள் கேட்பதற்கு முன்னரே ஆறாம் நூற்றாண்டின் இறுதியில் இஸ்லாம் எல்லா உரிமைகளையும் வழங்கிவிட்டது. அப்படியென்றால் இந்தப் 'பெண் விடுதலை' 'பெண்ணுரிமை' 'பெண்ணிலைவாதம்' என்ற சொற்கள் எங்கிருந்து வந்தன? இஸ்லாமிய சமூகத்திலிருந்தா? இல்லை. பிரான்சில் ஆணுக்குச் சமமாக பெண்களுக்கு கூலி வழங்கப்படாத போது ஏற்பட்ட பிரச்சினையே இது என்பதை சகோதரி தஸ்லீமாவுக்குப் புரிய வைக்க வேண்டும்.

இஸ்லாம் ஆண், பெண் என்று கூறுபோட்டு நோக்கவில்லை. பிரபஞ்சத்தில் மனிதன் அல்லாஹ்வின் 'பிரதிநிதி' என்றுதான் இஸ்லாம் கூறுகின்றது. பிரதிநிதி என்றால் ஆண்மட்டும்தானா?

இவ்வாறு இஸ்லாம் பெண்ணுக்கு வழங்கிய உரிமைகளையும் கடமைகளையும் எடுத்துரைப்பதோடு, இன்றைய முஸ்லிம் சமூகத்தில் அவை முழுமையாக வழங்கப்படவில்லை என்பதையும் நாம் ஒத்துக்கொள்ள வேண்டும். முஸ்லிம் சமூகத்தில் பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை இனம்காட்டுவதோடு இந்நிலையை நீக்கி உரிமைகளையும், கடமைகளையும் இஸ்லாத்தின் நிழலில் பெண்களுக்கு பெற்றுக்கொடுப்பதற்கு சகோதரியையும் துணைக்கு வருமாறு அழைக்க வேண்டும்.

இத்தகைய சூழ்நிலைகளில் இஸ்லாமிய சமூகப் புணரமைப்பில் ஈடுபட்டிருக்கும் இஸ்லாமியவாதிகள் எடுத்த எடுப்பிலேயே தீர்ப்புக் கொடுக்கும் நிலைக்கு வந்துவிடக்கூடாது. தீர்ப்புக் கொடுக்கும் பொறுப்பை இஸ்லாம் நீதிபதியிடம் ஒப்படைத்துள்ளது. உண்மையில் ஒரு கொள்கைவாதியின் கொள்கை விமர்சிக்கப்படும் போது ஆத்திரம் வருவது இயற்கைதான். அதே நேரம் உணர்ச்சியில்லாதவன் கொள்கைவாதியாகவும் இருக்க முடியாது. நாம் இங்கு கூறவிரும்புவது இஸ்லாமியவாதிகள் பிரச்சாரகர்களாக இருக்க வேண்டுமேயொழிய நீதிபதிகளின் நிலைக்கு வந்துவிடக்கூடாது என்பதைத்தான். அவ்வாறு வருவது இஸ்லாமியப் புணரமைப்பில் பெரிய தடைகளை ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை.

எனவே இத்தகைய பிரச்சினைகளோடு சம்பந்தப்பட்டவர்களை விசாரிப்பதற்கு நல்ல இஸ்லாமியத் தெளிவுள்ள, ஆளுமையுள்ள நடுநிலையான போக்குடையவர்களைக் கொண்டமைக்கப்பட்ட குழுவொன்றை ஏற்படுத்துவது அவசியமாகும். முதலில் அவன்

என்ன பேசுகிறான் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். அந்தப் புரிந்து கொள்ளல் மீதுதான் எமது தீர்ப்பு அமையப்போகிறது என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

விசாரணையை அவதானிப்பதற்கும், அதில் பங்குகொள்வதற்கும் ஐக்கியநாடுகள் சபையின் அதிகாரிகள் அல்லது முஸ்லிமல்லாத பத்திரிகையாளர்கள், செய்தியாளர்கள் கண்டிப்பாக வரவழைக்கப்பட வேண்டும்.

விசாரணைகள் முடிவில் குற்றவாளி தனது வாதங்களைப் பிழையென ஒப்புக் கொண்டால் அவர் பகிரங்கமாக மன்னிப்புக் கேட்பதோடு அவரால் ஏற்பட்ட பாதிப்பை அவர் ஈடுசெய்ய வேண்டும். எந்தவித நியாயமுமின்றி குற்றவாளி தனது வாத்த்தையே சரியென நினைப்பாராயின் அவரது நிலைப்பாடு முஸ்லிம் சமூகத்திற்கு பேரபாயமாக உணரப்படுமாயின் அக்குழுவினர் ஷரீஅத்தின் வெளிச்சத்தில் வழங்கும் தீர்பை அவர் ஏற்றுத்தான் ஆகவேண்டும்.

ஏனெனில் ஒரு சமூகத்தின் அழிவு இரண்டு வகையாக அமையமுடியும். ஒன்று அச்சமூகத்திலிருக்கின்ற மனிதர்களை உயிருடன் கொலை செய்வதாகும். அடுத்தது அச்சமூகத்திலிருக்கின்ற மனிதர்களின் கொள்கைகளை கொலை செய்வதாகும். இது முன்னரைவிட பேராபத்தாகும். இத்தகைய கொலைக்கு ஒருவரை அனுமதிக்கமுடியுமா?

“கொள்கையை விட்டு ஒருவனைத் திருப்புவது கொலை செய்வதைவிடக் கடுமையானதாகும்” (அல் பகரா 191)

முற்றும்

**துணை நின்றவை**


1. பதாவா முஆஸிரா – கலாநிதி யூசுப் அல் கர்ளாவி
2. அத்தஷ்ரீஉல் ஜினாயி அல் இஸ்லாமி – அஷ் ஷஹீத் அப்துல் காதிர் அவ்தா
3. உஸுலுத் தஷ்ரீஉல் ஜினாயி அல் இஸ்லாமி ஸலீம் அல் அவா
4. துஆத் லா குழாத் – அஷ் ஷஹீத் ஹஸன் ஹுழைபி
5. இஸ்லாம் இந்த மண்ணுக்கேற்ற மார்க்கம் – வலம் புரிஜான்